பார்ப்பதற்கும், அங்கே இயற்கையாக அமைந்துள்ள நீர் வீழ்ச்சியைப் பார்ப்பதற்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட வல்வில் ஓரி விழா ஒவ்வொரு ஆண்டும் ஜூலைத் திங்கள் இரண்டு மற்றும் மூன்றாம் தேதிகளில் நடைபெறுவதைக் காண்பதற்கும் பொது மக்கள் நிரம்ப வருகிறார்கள். அந்த விழாக்காலத்தில் வருகிற பொது மக்களுக்குப் போதிய தங்கும் வசதி இல்லாத காரணத்தால் நிறைய சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதையெல்லாம் மனதில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் அங்கே தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற தங்கும் விடுதி முடியும் தருவாயில் இருக்கிறது. அதற்குப் பிறகு மேலும் அப்படிப்பட்ட விடுதிகளைக் கட்டுவது பற்றி பரிசீலிக்கலாம்.

10-55 மணி

லாயல்மில் காலனிப் பகுதியை கோவில்பட்டி நகராட்சியுடன் இணைத்தல்.

*3465 திரு. சோ. அழகர்சாமி :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி வட்டம், இலுப்பையூரணி ஊராட்சியைச் சேர்ந்துள்ள லாயல்மில் காலனி பகுதியைப் பிரித்து கோவில்பட்டி நகராட்சியுடன் இணைக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1990 ஆம் ஆண்டு மக்கட்தொகை கணக்கெடுப்பின் காரணமாக நிர்வாக மாறுதல்களுக்கு 30—6—1991 வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு இது குறித்து பரிசீலித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

1990 ஆகஸ்ட் 20]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில்பட்டி நகரத்தையொட்டியுள்ள, லாயல்மில் காலனி என்று சொல்லக்கூடிய பகுதி, இலுப்பையூரணி ஊராட்சி என்ற அந்த ஊராட்சி மன்றத்தினுடைய எல்லையிலிருந்து கொஞ்சம் அதிகமான தூரத்தில், நகரத்தையொட்டி இருக்கிற காரணத்தாலே, ஊராட்சியிலிருந்து அந்த மக்களுக்கு வேண்டிய விளக்கு வசதி, குடிதண்ணீர் வசதி போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதிலே, பொருளாதார வசதி இல்லை என்ற காரணத்தாலே, அந்த வசதிகள் செய்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே நகரத்தோடு சேர்க்க வேண்டும் என்று ஊராட்சி மன்றமும் தீர்மானம் நிறைவேற்றி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. அந்த நகர மன்றமும் அதை ஏற்றுக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறது. அப்படி இருக்கும்போது, இப்போதுதான், அதாவது 6 மாதங்களுக்கு முன்னால்தான், இந்தத் தடை வந்திருக்கிறது. ஆகவே, ஒரு சாதாரண பிரச்சினைக்கு இவ்வளவு காலதாமதம் ஆகாமல், உடனுக்குடன் அந்த ஊராட்சி மன்றம் தீர்மானம் நிறைவேற்றியவுடனே, நகர மன்றமும் ஏற்றுக்கொண்டால், உடனடியாக அவர்கள் அந்தப் பகுதியை அதோடு இணைத்துக் கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் துரிதமாக செய்வதற்கு, வேண்டிய விதிகளை திருத்தும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தையொட்டி முன்னாள் கோவில்பட்டி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் மதிப்புக்குரிய திரு. ரங்கசாமி அவர்கள் ஒரு மகஜரை அனுப்பியிருந்தார்கள். அது பற்றி பரிசீலிக்கப்பட்டது. பரிசீலிக்கப்பட்டு, அந்த நகராட்சியினுடைய தீர்மானம் பெற வேண்டும் என்று ஒரு முறை அனுப்பப்பட்டு, திரும்ப சில காலம் கழித்து, அதுவும் வரப்பெற்றது. அதற்குப் பிறகு, இலுப்பையூரணி ஊராட்சி, லாயல்மில் காலனி பகுதியைப் பிரித்து, கோவில்பட்டி நகராட்சியுடன் சேர்க்க தீர்மானம் நிறைவேற்றியிருந்தும், அந்தத் தீர்மானத்தில், அப்பகுதியில் சேர்க்கப்பட வேண்டிய சில பகுதிகளினுடைய சர்வே எண்கள் விடப்பட்டு விட்ட காரணத்தால் திரும்பவும் அது அனுப்பப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டு, இன்னும் நகராட்சி இயக்குநரிடத்திலிருந்து அந்த அறிக்கை வரப்பெறாமல் இருக்கிறது. இந்தத் தடையாணை இருந்தாலும் கூட, அதற்குரிய நடவடிக்கைகளை அப்போது எடுத்து இருக்கிறார்கள். அதற்குள் தடையாணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. ஆகவே இதில் காலதாமதம் ஆகிறது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஒரு ஊராட்சி ஒன்றியப் பகுதி, ஒரு நகராட்சியோடு அல்லது வேறு ஒரு ஊராட்சியோடு சேர்க்கக்கூடிய

இந்த மாதிரி காரியங்களை எல்லாம் செய்வதற்கு அரசு வரை வருவதற்குப் பதிலாக, மாவட்ட ஆட்சித் தலைவர் அளவிலே அதாவது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தினுடைய அந்த அளவிலே, இதைச் செய்துகொள்வதற்கான நடைமுறையை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோலான கோரிக்கைகள் சரியானவை யாகவும், தவறானவைகளாகவும், அரசியல் காரணங்களுக்காக சில நேரங்களில் பகுதிகளைப் பிரித்தால்தான், தங்களுடைய ஆதிக்கம் இருக்கும் என்ற அடிப்படையில் சில தவறுகள் அவ் வப்போது நடந்துவிடுகின்றன. அதனால்தான் அரசாங்கத்திற்கு வந்து பரிசீலிக்கப்பட்டு, துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இப்போது அது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செயற்கை புல்தரை அமைத்தல்

***10121** திரு. இளம்வழுதி :
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எழும்பூரிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான மேயர் இராதாகிருஷ்ணன் ஸ்டேடியத்தில் '' Astro Turf '' என்று சொல்லப்படுகிற செயற்கை புல்தரை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; எழும்பூரிலுள்ள சென்னை மாநக ராட்சிக்குச் சொந்தமான மேயர் இராதாகிருஷ்ணன் விளை யாட்டு அரங்கத்தில் செயற்கை புல்தரை அமைக்கும் திட்டம் எதுவும் மாநகராட்சியின் வசம் இல்லை.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பெங்களூரிலும், மத்தியப் பிரதேசத்தில் போபாலிலும், உத்தரப்பிரதேசத்தில் லக்னோ விலும், பஞ்சாபில் பாட்டியாலாவிலும், இதுபோன்ற 'ஆஸ்ட் ரோ டர்ப்' இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் ஓரிடத்தில் கூட இந்தச் செயற்கை புல்தரை இல்லை. இந்த நிலையிலே,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS